## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 190 /2014 P.W. 3 /LW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சுசீலா** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. செல்வம் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 14.11.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

1) நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம்தான். அசா 1 மணிகண்டன் எனது தங்கை வேம்புவின் கணவர்தான். நாங்கள் அனைவரும் ஆஜர் எதிரிகள் மீது புகார் கொடுத்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். 2011 ஆம் வருடம் நாங்கள் வசந்தாவிடம் 1. 1/4 லட்சத்திற்கு சீட்டு போட்டிருந்தேன். அதில் 90 ஆயிரம் வரை கட்டியிருந்தேன். நாங்கள் சீட்டுப்பணத்தை வசந்தாவிடம் கேட்டபோது அப்புறம்தருகிறோம் என்ற பிரச்சனை செய்தார். பணத்தை தராமல் எங்களை எதிரிகள் ஏமாற்றி விட்டார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** : **குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) நான் ஒரு லட்சத்து 20 ஆயிரம் சீட்டுப்பணம் கட்டி அதில் புகார் கொடுத்ததால் பாதிக்கப்பட்ட நபர் என்ற அடிப்படையில் நான் புகார்தாரராக மன்னார்குடி காவல்நிலையத்தில் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். நான் புகார் கொடுக்கும்போது என்னுடைய புகார் மனுவுடன் நான் தனிப்பட்ட முறையில் சீட்டு கட்டியதற்கான ஆவணங்களை காவல்நிலையத்தில் புகாருடன் ஒப்படைத்து விட்டேன் என்றால் சரிதான்.

2) என்னுடன் சேர்த்து 16 பேர் மன்னார்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். அப்போது காவல்நிலையத்தில் வைத்து என்னை போலீசார் விசாரித்தார்கள். நான் பாதிக்கப்பட்ட நபர் அடிப்படையில்தான் நான் இன்று சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். நான் சொல்வதுபோல் எதிரிகள் எந்தவிதமான ஏலச்சீட்டும் நடத்தவில்லை என்றும், நான் ஏதும் சீட்டு சேரவில்லை என்றும், என் சகோதரி எதிரிகள் மீது கொடுத்த பொய்யான

புகாரின் அடிப்படையில் நான் சாட்சியாக குறிப்பிடப்பட்டு முதல் விசாரணையில் பொய் சாட்சியம் முன்வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/------ A.S. Ameerdheen

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 190 /2014 P.W. 4 /LW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மாரியம்மாள்** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. தெட்சிணாமூர்த்தி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 14.11.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

1) நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம்தான். அசா 1 மணிகண்டன்அசா 2 வேம்பு மற்றும் சுசீலா அனைவரையும் தெரியும். நாங்கள் அனைவரும் சீட்டு போட்ட வகையில் தெரியும். ஆஜர் எதிரி மற்றும் அவரது தாயார் வசந்தா ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர் நடத்திய ஏச்சீட்டு எனக்கு சரியாக ஞாபகத்தில் இல்லை. 1. 1/4 லட்சம் சீட்டினை அவரிடம் போட்டோம். மாதாம் , மாதாம் கசறு போக 17 மாதங்களுக்கு 90 ஆயிரம் கட்டினேன். அவர் பணத்தினை இந்த தருகிறேன் , தருகிறேன் என்று ஏமாற்றிவிட்டார்கள். இது குறித்து போலீசில் புகார் கொடுக்கப்பட்டது, என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) இந்த வழக்கின் சாட்சியாக போடப்பட்ட சுமதி என்பவர் கொடுத்த புகாரின் பேரில்தான் என்னை சாட்சியாக போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் போட்ட சீட்டுக்கு காலக்கெடு 20 மாதம் . நான் மாத தவணையாக ரூ. 5000/-* செலுத்தும் 20 மாதங்களுக்கு செலுத்தும் சீட்டில் சேர்ந்தேன். என்னிடம் இருந்த ஆவணங்களை எல்லாம் போலீசார் விசாரிக்கும்போது கொடுத்தேன் என்றால் சரிதான். என்னை போலீசார் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். சுமதி எனது தோழி என்பதால் நான் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரியில்ல.

2) நான் முதல் விசாரணையில் சொன்னபடி எதிரி எந்த சீட்டும் நடத்தவும் இல்லை. நான் அதில் சேரவும் இல்லை. போலீசார் சொல்லிக்கொடுத்ததன் இஅடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/----- A.S. Ameerdheen

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 190 /2014 P.W. 5 /LW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சுமதி | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 14.11.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

1) நான் மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம்தான். அசா 1 மணிகண்டன்அசா 2 வேம்பு மற்றும் சுசீலா , மாரியம்மாள் அனைவரையும் தெரியும். நாங்கள் அனைவரும் சீட்டு போட்ட வகையில் தெரியும். இந்த வழக்கின் எதிரிகள் குமரவேல் மற்றும் வசந்தாவிடம் பணம் கொடுத்து ஏமாந்து விட்டோம். ஒரு லட்சத்து 80 ஆயிரம் மொத்தமாக கட்டியுள்ளேன்.

2) சித்தி வினாயகா என்ற பெயரில்தான் எதிரிகள் ஏலச்சீட்டு நடத்தினார்கள். அவர்கள் எனக்கு அது சம்பந்தமாக ஆவணமும் கொடுத்துள்ளார்கள். அந்த ஆவணம் என்னிடம் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய இயலும். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஒரு வாய்ப்புக்கேட்டு கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் முதல் விசாரணையை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்க கேட்டுக்கொள்கிறார். மேற்படி முதல் விசாரணை நீதியின் நலன் கருதி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/---- A.S. Ameerdheen

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.